**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**
**அசல் வழக்கு எண். 229/2018**

**2019 ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ம் நாள்**

சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி **திருமதி.எஸ்.மோகனரம்யா பி.ஏ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி** அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தங்கம்மாள் | வயது | 63 |
| க.பெ. | ராகவன் | மதம் | |
| முகவரி | | தொழில் | |

**நான் இந்த வழக்கில் வாதி தரப்பு 1 ம் சாட்சி (PW1) (10.04.2019)**

**1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இவ்வழக்கு சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியாது, பேச தெரியும். எனது சொந்த ஊர் கேரளா மாநிலம், கம்பம்மெட்டு. என் உடன் பிறந்தவர்கள் ஏழு நபர்கள் ஆவார்கள். என் உடன் பிறந்தவர்கள் யாரும் தற்போது உயிருடன் இல்லை, தற்போது மழை வெள்ள நீரில் அடித்து செல்லப்பட்டார்கள். எனக்கும், ராகவனுக்கு இடையே நடைபெற்றதாக சொல்லும் திருமணம் பெரியோர்களால் நிச்சைக்கப்பட்ட திருமணம் ஆகும். எனக்கு எந்த தேதி, மாதம், வருடம், எந்த இடத்தில் திருமணம் நடைபெற்றது என்றால் எனக்கு தேதி, மாதம், வருடம் ஞாபகம் இல்லை, கம்பம்மெட்டில் உள்ள என்னுடைய வீட்டில் வைத்து திருமணம் நடைபெற்றது. யாருடைய முன்னிலையில் திருமணம் நடைபெற்றது என்றால் என்னுடைய பெற்றோர், ராகவனுடைய பெற்றோர் மற்றும் உறவினர்கள், அருகாமையில் உள்ளவர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது. ராகவனுடைய தாயார் மற்றும் தகப்பனார் யார் என்றால் நாராயாணியம்மாள் மற்றும் பரமேஷ்வரன் ஆவார்கள். ராகவனுடைய பெற்றோர்கள் எப்போது இறந்தார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடைய வழக்குரை மற்றும் பிரமாண வாக்கு மூலத்தில் எந்த தேதி, மாதம், வருடம், எந்த இடத்தில், யாருடைய முன்னிலையில் திருமணம் நடைபெற்றது என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

எனக்கும், ராவனுக்கும் நடைபெற்றதாக சொல்லும், திருமணத்திற்கு ஆதரவாக நீதிமன்றத்தில் ஆவணம் முன்னிலைப்படுத்தவில்லை என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதி ராகவனின் மனைவி என்றால் சரியல்ல. 2 ஆம் பிரதிவாதி 1 ஆம் பிரதிவாதிக்கும், ராகவனுக்கும் பிறந்த மகள் என்றால் 2 ஆம் பிரதிவாதி 1 ஆம் பிரதிவாதிக்கும் ராகவனக்கும் பிறந்த மகள் என்று சொன்னார்கள், அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கும் ராகவனுக்கும் திருமணம் நடைபெறவில்லை என்றும், நான் ராகவனின் மனைவி அல்ல என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் 1 ஆம் பிரதிவாதி ராகவனின் மனைவி என்றும், 2 ஆம் பிரதிவாதி ராகவன் மற்றும் 1 ஆம் பிரதிவாதிக்கு பிறந்த மகள் என குறிப்பிட்டுள்ளேன் என்றும், தற்போது எனது வழக்குரையில் கண்ட சங்கதிகளுக்கு முரணாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2 ஆம் வாதி சசிகலா 1972 ஆம் ஆண்டு தேனி மாவட்டம் கம்பத்தில் பிறந்தார். 2 ஆம் வாதியினுடைய பிறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை என்றால் சரிதான். 2 ஆம் வாதியினுடைய பிறப்பு சான்றிதழ் என் வசம் உள்ளதா என்றால் உள்ளது. 2 ஆம் வாதியினுடைய பிறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு தயாராக உள்ளேனா என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். 2 ஆம் வாதி ராகவனுடைய மகள் அல்ல என்றால் சரியல்ல. 2 ஆம் வாதி ராகவனுக்கு பிறந்தவர் என்பதனை நிருபிக்க மருத்துவ ஆய்வுக்கு நான் தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். 3 ஆம் வாதியினுடைய பிறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை என்றால் சரிதான். **(வழக்குரைஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்பட்டது.)**